## மேட்டுப்பாளையம் நகராட்சி

31.07.2018ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 04.30 மணிக்கு நடைபெறவுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

### கூட்டப் பொருள்

| | |
|---|---|
| 1. | மேட்டுப்பாளையம் நகராட்சியில் NULM 2016 / 2017 ன் கீழ் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் மேட்டுப்பாளையம் அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் அக, புற நேயாளிகளின் பாதுகாவலர்கள் தங்கும் விடுதி அமைத்தல் பணிக்கு 10.04.2018ல் முதல் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற 1). K,M இன்ஜினியரிங் கோயமுத்தூர் மற்றும் 2). A.V கன்ஸ்ட்ரக்ஷன் கூடலூர் ஆகியோரது இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப உறைகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதிகள் பெறப்படவில்லை.<br>மேலும் இப்பணிக்கு இரண்டாவது அழைப்பாக 04.05.2018லும் மூன்றாவது அழைப்பாக 28.05.2018 லும் நான்காவது அழைப்பாக 20.08.2018ம் தேதியும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் நேரிடையாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ மேற்குறிப்பிட்ட அழைப்புகளில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் கிடைக்கப்பெறவில்லை ஆதலால் 5வது அழைப்பாக 20.07.2018 ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் நேரிடையாக ஒரு ஒப்பந்தப்புள்ளி M/s. V.R.K. கன்ஸ்ட்ரக்ஷன் சிறுமுகை கிடைக்கப்பெற்றது.<br>ஆதலால், இத்திட்டப்பணியின் அவசியம் கருதியும் பணிக்கான முழுமானியத்தொகை பெறப்பட்டதால் விரைந்து பணியினை முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவருவதனை கருத்தில் கொண்டும் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் காலதாமதம் மற்றும் செலவினம் ஆகியவற்றினை காரணமாகவும் அன்றைய தினமே 20.07.2018 வரப்பெற்ற V.R.K. கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளிகளின் இரு உறைகளின் தொழில்நுட்பத் தகுதிக்கான (Technical Bid) உறையினை கூர்ந்தாய்வுக் குழுவினர் முன்னிலையில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் அன்னாரது ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்பத் தகுதி பெறப்பட்டது தெரியவந்தது.<br>எனவே, இவ்வொப்பந்தப்புள்ளியின் விலைப்புள்ளி உறையினை (Price bid) 23.07.2018ல் ஒப்பந்ததாரர், கூர்ந்தாய்வு குழுவினர் முன்னிலையில் பிரிக்கப்பட்டு மதிப்பீட்டிற்கு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. இவ்வொப்பந்தப்புள்ளி மதிப்பீட்டிற்கு 4.90% அதிகமாக கொடுக்கப்பட்டுள்ளது.<br>அன்றைய தினமே ஒப்பந்ததாரர்க்கு விலைக்குறைப்பு செய்து தரக்கோரப்பட்டதில் 24.07.2018 தேதியிட்ட கடிதத்தில் தற்பொழுது கட்டுமானப் பொருட்கள் விலையேற்றம், மணல்தட்டுப்பாடு, இரும்பு சாமான்கள், விலையேற்றம் மற்றும் எரிபொருள் விலையேற்றம், காரணமாக விலைக்குறைப்பு செய்துதர இயலாது எனவும் விலைப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள 4.96% மதிப்பீட்டிற்கு அதிகமாக கொடுத்துள்ளவாறே பணி ஆணை உத்தரவு வழங்கிட கோரியுள்ளார்.<br>கூட்டமர்வில் இவ்வொப்பந்தப்புள்ளி 5வது அழைப்பாகவும் மதிப்பீட்டிற்கு 5% மிகாமலும் உள்ளதால் திட்டப்பணியின் அவசியம் கருதி இவ்வொப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : இத்திட்டப்பணியின் அவசியம் கருதியும் அரசு பொதுமருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் நலன் கருதியும் பணியினை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவருவதன் காரணமாகவும் இவ்வொப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.<br><br>இப்பணி மேற்கொள்ளப்படுவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்தினை நகராட்சி பொதுநிதியின் மூலம் ஈடுசெய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண் 1281/2016/இ1<br>தீர்மானம் எண் : 66<br>தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது |

2. அரசாணை எண் 389 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 09.09.2016ன்படி பவானி ஆற்றில் கழிவுநீர் வெளியேற்றப்படுவதை தடுக்கும் பொருட்டு பாதாள சாக்கடை அமைக்க மதிப்பீடு ரூ.91.70 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
கீழ்க்கண்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | நிதி ஆதாரம் | தொகை (ரூ. கோடியில்) | விபரம் |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு நகர்ப்புற கூட்டமைப்பு நிதி சேவை கழகம் (TNUIFSL) மூலம் TNUDF ன் கீழ் KFW SMIF – TN –II–2 | 18.34 | 20% |
| 2 | உலக வங்கி நிதி உதவியுடன் (PSGF) KFW SMIF-TN-II–2 மூலம் மான்யம் | 64.19 | 70% |
| 3 | நகராட்சி பங்குத் தொகை | 9.17 | 10% |
| | மொத்தம் | 91.70 | 100% |

மேற்படி பணியை மூன்று தொகுப்புகளாக பிரித்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 09.04.2018 அன்று இரண்டு தொகுப்புகளுக்கு ஒப்பந்ததாரருக்கு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் மூலம் வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. கோயமுத்தூர் நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கோயமுத்தூர் கடித ந.க.எண் 26/F Fund/MTP-UGSS/JDO/2018. நாள் 27.07.2018அவர்களின் கடிதத்தில் மதிப்பீட்டு தொகையை விட கூடுதல் ஒப்பந்தத் தொகை ரூ.12.55 கோடி மற்றும் அதற்கான 5% சென்டேஜ் தொகை ரூபாய் 0.63 கோடி ஆக மொத்தம் ரூ.13.18 கோடி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இக்கூடுதல் ஒப்பந்தத் தொகை ரூ.13.18 கோடியை நிதி ஒதுக்கீடு பெறவோ அல்லது நகராட்சி நிதியிலிருந்து செலுத்தவோ நகர்மன்ற தீர்மானம்நிறைவேற்றி நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் தற்போதைய நிதி நிலைமையை கருத்தில் கொண்டு மதிப்பீட்டு தொகையை விட கூடுதலான ஒப்பந்த தொகை ரூ.13.18 கோடியும் நகராட்சி பங்களிப்பு ரூ.9.17 கோடி ஆக மொத்தம் ரூ.22.35 கோடியினை திட்ட நிதியில் சேர்த்து முழு மானியமாக அரசிடம் பெற்றுத்தர நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண் 1819/2016/இ1
தீர்மானம் எண் : 67
தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

3. இந்நகராட்சிக்கு சொந்தமான குறைந்த வருவாய் குடியிருப்பு வீடுகளுக்கு வாடகையை குறைத்து தரவும், இக்குடியிருப்புகளை சொந்தமாக்கி தரக்கோரி திருமதி. காந்தாமணி என்பவர் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் வழக்கு எண் O.S.No 167/2018 I.A. No 431/2018ன் படி நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார்.
எனவே மேற்படி வழக்கிற்கு வக்காலத்து File பண்ணவும் வழக்கு கட்டணம் செலுத்தவும் இந்நகராட்சி நிலை வழக்குரைஞர் திரு. M.V.செந்தில் குமார் அவர்களை வழக்காடவும் வழக்கு கட்டணம் வழங்கவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்
தீர்மானம் எண் : 68
தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

| | |
|---|---|
| 4 | இந்நகராட்சியில் தலைமை நீரேற்று நிலையம் கிளீனர் ஆக பணிபுரியும் திரு. ரங்கராஜ் அவர்கள் **06.10.2016** அன்று **25** வருடம் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளார். அரசாணை எண் **222.** Finance (Paycell) Department நாள்**01.07.2013** ன் படி அன்னாருக்கு ரூ.**2000/–** வழங்க வேண்டியுள்ளது.<br>எனவே, திரு.ரங்கராஜ், கிளீனர் அவர்களுக்கு ரூ.**2000/–** இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் **2332/2018/இ1**<br>தீர்மானம் எண் : **69**<br>தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது |
| 5 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளது. இங்குள்ள **60** குடியிருப்புகளுக்கு Bore Well மூலம் குழாய்களில் தண்ணீர் வசதி திட்ட நிதியின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது பயனாளிகளுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்ய குடிநீர் குழாய்கள் தனியாக அமைக்க வேண்டியுள்ளது. இந்த குடியிருப்புகள் தரைதளம் முதல் இரண்டாம் தளங்கள் உள்ளதால் குடிநீர் படிக்கட்டுகள் வழியாக கொண்டு செல்வது பயனாளிகளுக்கு மிகவும் கடினம் எனபதாலும் மேலும் சுகாதாரமான மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை தனியாக குழாய்கள் மூலம் கொண்டு செல்ல வேண்டியிருந்தது. இதற்கு மோட்டார் குழாய்கள் மற்றும் தனியாக ஒவ்வொரு வீட்டுக்கும் குடிநீருக்கு பிரத்யோக Sintex வைத்து ரூ.**3.00** இலட்சத்திற்கு தயார் செய்து இப்பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி விதி **15**ன் கீழ் மேற்கொண்டு முடிக்கப்பட்டது. இப்பணியின் செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொண்டதை மன்றத்தின் பதிவுக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்<br>தீர்மானம் எண் : **70**<br>தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது |
| 6 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வர மின்சார வசதி மேற்கொள்ள வேண்டியுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் இருந்து மின்சாரம் பெற அனைத்து Panel Bord க்கு Service Wiring மற்றும் Earthing பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணியினை உடனடியாக மேற்கொண்டு பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ளதாலும் மேலும் இப்பணியின் அவசரம் அவசியம் கருதி இப்பணிக்கு ரூ.**85,000/–** க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணியின் அவசரம் அவசியம் கருதி நகராட்சி விதி எண் **15**ன் கீழ் மேற்கொண்டு முடிக்கப்பட்டது. இப்பணியின் செலவினத் தொகையை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்<br>தீர்மானம் எண் : **71**<br>தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது |
| 7. | மேட்டுப்பாளையம் நகராட்சியில் சேகரிக்கப்படும் குப்பைகள் சிராஜ்நகரில் அமைந்துள்ள குப்பைகிடங்கில் சேகரிப்படுகிறது. அங்கு சேகரிக்கப்படும் குப்பைகளை IWMUST நிறுவனம் குப்பைகளை தரம் பிரித்து மக்கும் குப்பையில் இருந்து உரம் தயாரிக்கப்படுகிறது. இப்பணி மேற்கொள்ளப்படுவதினால் மக்கும் குப்பைகள் உரமாக தயாரிக்கப்பட்டு குப்பைகள் குவிவது குறைக்கப்படுகிறது. பார்வையில் குறிப்பிட்டுள்ள கடிதத்தின் அடிப்படையில் தற்பொழுது அந்நிறுவனம் செயல்படாமல் இருப்பதால் தரம் பிரிக்கப்படாமல் அப்படியே நகராட்சியின் குப்பைக்கிடங்கில் கொட்டப்படுகின்றன. தரம் பிரிக்காமல் கொட்டப்படும் குப்பைகளினால் அங்கு கொசுக்கள் மற்றும் பூச்சிகள் வந்து நோய் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது. மற்றும் குப்பைக்கிடங்கில் வாகனங்கள் செல்ல போதுமான வழிகள் இல்லாத காரணத்தால் குப்பைகளை அருகில் உள்ள இடங்களில் கொட்டப்படுவதால் தினந்தோறும் வாகனங்கள் செல்ல முடியாத வண்ணம் உள்ளது. இதனால் அருகில் உள்ள பொதுமக்களுக்கு சுகாதாரத்கேடு விளைவிக்க வாய்ப்பு உள்ளதாலும் மேலும் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் புகார் தெரிவித்து உள்ளனர். இதனால் இக்குப்பைகளை அகற்றி வாகனங்கள் செல்ல ஏதுவாக வழி செய்யவும் மேலும் முன்புறம் மற்றும் நுழைவாயில் அருகில் உள்ள குப்பைகள் அகற்றி |

<table>
<tr><td></td><td>பின்புறம் உள்ள இடத்தில் மாற்றவும் பொதுமக்களுக்கு சுகாதார கேடு விளைவிக்காமல் தடுக்க இயந்திரங்கள் செயின்டோசர் மற்றும் டிப்பர் லாரிகளை கொண்டு இப்பணியினை பொதுமக்கள் நலன்கருதி மேற்கொள்ள ரூ.2.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : இப்பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>தீர்மானம் எண் : 72<br>தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>8.</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொதுநிதி 2018 – 19ன் கீழ் நகராட்சி உரக்கிடங்குப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 27.07.2018 ம் தேதியில் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் கீழ்க்காணுமாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><td>வ. எண்</td><td>பணியின் பெயர்</td><td>மதிப்பீடு ரூ இலட்சத்தில்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>மதிப்பீட்டு விழுக்காடு</td></tr>
<tr><td>1</td><td>உரக்கிடங்கு பகுதியில் இருப்பு வைக்கப்பட்டுள்ள குப்பைகள் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் செயின்டோசர் மூலம் அப்புறப்படுத்தும் பணி செய்தல்</td><td>2.50</td><td>G.K.S. சேதுபதி<br><br>M.வேலுசாமி</td><td>0.1% மதிப்பீட்டை விட குறைவு<br><br>2.0% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
<br>மேற்காணும் வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டிற்கு 0.1% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள G.K.S. சேதுபதி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>தீர்மானம் எண் : 73<br>தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>9.</td><td>தமிழ்நாடு அரசிதழ் எண்: 236 நாள்: 30.06.2018 அரசு அறிவிக்கையில் (அரசாணை எண்: 68 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் : 30.06.2018) (நகராட்சி தனி அலுவலர் பதவிக்காலத்தை 30.06.2018 தேதியிலிருந்து மேலும் 6 மாத காலத்திற்கு 31.12.2018 வரை நீட்டித்து உத்திரவிட்டு வரப்பெற்றுள்ளது. அரசிதழின்படி வரப்பெற்ற அறிவிக்கை தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : பதிவு செய்யலாம்<br>ந.க.எண் :1500/2018/சி1<br>தீர்மானம் எண் : 74<br>தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது</td></tr>
</table>

10. இந்நகராட்சி பொதுச் சுகாதார பிரிவு வாகனம் டி.எண்.40 – 3711 தகுதிச் சான்று பெறும்பொருட்டு பழுது பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு கடந்த 26.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர் ஆர்.சி.சேகர் இஞ்ஜினியரிங் & ஹைறடுராலிக்ஸ். | ரூ.1,31,900/– |
| 2. | திருவாளர் ஸ்ரீ பாக்யலட்சுமி ஒர்க்ஸ், ஈரோடு. | ரூ. 1,29,000/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர் ஸ்ரீ பாக்யலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்
தீர்மானம் எண் : 75
தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

11. மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்புப் பணி மேற்கொள்ள DBC எனப்படும் களப்பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்களுக்கு மாவட்ட ஆட்சியர், கோவை அவர்களின் 2016 –2017 ம் ஆண்டு நிர்ணயப்பட்டியல் மஸ்தூர் –2 ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.275/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது. 2011 ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியில் 18423 குடியிருப்புகள் உள்ளன. எனவே 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் 61 பணியாளர்களை பணியமர்த்தி கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்கள் இப்பணியினை 01.08.2018 முதல் 60 நாட்கள் மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.10,06,500/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்
ந.க.எண் :1688/2016/எச்1
தீர்மானம் எண் : 76
தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

12. மேட்டுப்பாளையம் நகராட்சி துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளது. இங்குள்ள 60 குடியிருப்புகளையும் Borewell மூலம் குழாய்களில் தண்ணீர் வசதி ஏற்படுத்த திட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது பயனாளிகளுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்ய குடிநீர் குழாய்கள் தனியாக அமைக்க வேண்டியுள்ளது. இந்த குடியிருப்புகள் தரைதளம் முதல் மற்றும் இரண்டாம் தளங்கள் உள்ளதால் குடிநீர் படிக்கட்டுகள் வழியாக கொண்டு செல்வது பயனாளிகளுக்கு மிகவும் கடினம் என்பதாலும் மேலும் சுகாதாரமான மற்றும் சுத்தகரிக்கப்பட்ட குடிநீரை தனியாக குழாய்கள் மூலம் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இக்குடியிருப்புக்கு உடனடியாக பயன்பாட்டிற்கு கொண்டுவர ‘D’ மற்றும் ‘E’ பிளாக்குகளுக்கு மேலும் ‘C’ பிளாக்கில் உள்ள வீடுகளுக்கு சிறுசிறு பராமரிப்பு பணிகள் மற்றும் D,E பிளாக்குகளில் குழாய்கள் மற்றும் Sintex வைப்பதற்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் உரிய நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்
தீர்மானம் எண் : 77
தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

13. மேட்டுப்பாளையம் நகராட்சி கல்விநிதி 2017 – 18ன் கீழ் 10.07.2018ல் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 32 மணி நகர் உயர்நிலைப்பள்ளியில் மராமத்து பணி செய்தல் | 9.00 | திரு. G.K.S. சேதுபதி | 0.03% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு. M.வேலுசாமி | 2.03% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | வார்டு எண் 1 அண்ணாநகர் நகராட்சி ஆரம்ப பள்ளியில் மராமத்து பணிகள் செய்தல் | 5.40 | திரு. C. நகராஜ் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு. M.வேலுசாமி | 2.03% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக் குறிப்பு : மேற்காணும் 2 பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

தீர்மானம் எண் : 78

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

| | |
|---|---|
| 14. | மேட்டுப்பாளையம் நகராட்சியில் (பொது நிதி 17–18) 04.07.2018ம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு% |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண் 3 வெள்ளிப்பாளையம் சாலையில் உள்ள துப்புரவு பணியாளர் குடியிருப்பிற்கு தண்ணீர் வசதி செய்தல் | 7.50 | M/S.செந்தில் கன்ஸ்ட்ரக்ஷன் கார்பரேஷன் லிமிடெட் | 0.30% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.P.கோபாலகிருஷ்ணன் | 2.58% மதிப்பீட்டிற்கு விட அதிகம் |
| 2. | வார்டு எண் 3. வெள்ளிப்பாளையம் சாலையில் உள்ள துப்புரவுப் பணியாளர் குடியிருப்பிற்கு மின்சார வசதிகள்செய்தல் | 6.50 | M/S.செந்தில் கன்ஸ்ட்ரக்ஷன் கார்பரேஷன் லிமிடெட் | 0.04% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு. P.கோபாலகிருஷ்ணன் | 1.23% மதிப்பீட்டிற்கு விட அதிகம் |
| 3. | நகராட்சி உரக்கிடங்கில் பயோ மெத்தனேசன் பிளான்ட் அருகில் அணுகுசாலை அமைத்தல் | 7.15 | திரு. R.செம்பா கவுண்டர் | 0.03% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு. G.K.S. சேதுபதி | 0.30% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 4. | வார்டு எண்30ல் ஹவுசிங்யூனிட் பகுதியில் குப்பைகளை உரிய முறையில் உரமாக்குவதற்கு தொட்டி மற்றும் மேற்கூரை அமைத்தல் | 4.70 | திரு. K.வேலுசாமி | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு. M.வேலுசாமி | 0.80% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் (வரிசை எண் 1 முதல் 4 வரை) மதிப்பீட்டிற்கு குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்
தீர்மானம் எண் : 79
தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

| | |
|---|---|
| 15. | இந்நகராட்சி பொதுச்சுகாதார பிரிவு வாகனம் டி.எண் 38–4571ன் பேட்டரி பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட வாகனத்திற்கு புதிய பேட்டரி வாங்கி பொருத்த ஆகும் தோராய செலவினம் ரூ. 10,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்<br>தீர்மானம் எண் : 80<br>தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 16. | மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு எண் **5** ல் உள்ள வள்ளுவர் நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுத்திறன் வளர்ச்சிக்காகவும், கவிதை, கட்டுரை மற்றும் இதர பண்பாட்டு நிகழ்ச்சிகள் நடத்தவும் அப்பள்ளி வளாகத்தில் ஏற்கனவே உள்ள திறந்தவெளி மேடையினை மேம்படுத்துதல் பொருட்டு மேற்கூரை அமைக்க ரூ.**3.90** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியை கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்<br>தீர்மானம் எண் : **81**<br>தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது |